13.02.2026

அ.வ.எண். 5/2021

பி.சா.1 – திரு. தங்கவேலு, த/பெ. பழனிக்கவுண்டர்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 13.02.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் Diploma படித்துள்ளேன். பி.சா.ஆ.1 வரைபடத்தில் புல எண்.956/4 மற்றும் 5 ல் நீல நிறத்தில் காட்டப்பட்டுள்ள குறியீட்டை நான் தான் செய்தேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.2 வரைபடத்தில், மாற்றம் ஏதேனும் உள்ளதா என்றால் பி.சா.ஆ. 1 ல் உள்ளவாறு தான் உள்ளது. நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஃபோர்மேனாக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். அரசு ஊழியராக இருந்த காரணத்தால் அரசின் ஆவணங்களில் மாற்றங்கள் செய்யக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விவரம் தெரியும் என்றும்,நீதிமன்றத்தில் தவறான உத்தரவு பெற வேண்டி மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. எதிர் வழக்குரை, பிரமாண வாக்குமூலம் மற்றும் நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்காக ஆட்சேபணை விவரங்கள் பற்றி எனக்கு தெரியும். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு எதிராக நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் நீதிமன்ற ஆணையர் அறிக்கை சரியாக உள்ளதால் மேற்படி அறிக்கைக்கு எதிராக மேல்முறையீடு செய்யவில்லை என்றால் விண்ணப்பம் கொடுத்துள்ளேன். நான் பஞ்சாயத்து அனுமதி பெற்று வீடு கட்டினேனா என்றால் ஆமாம். பஞ்சாயத்து அனுமதியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

3. வழக்கு சொத்து புல எண்.956/3, 4, 5 ல் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய சொத்து புல எண்.955/4 காலையில் உள்ளது. வாதிகள் 80 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்தில் உள்ளனர் என்றால் எனக்கு தெரியாது.

வழக்கு சொத்து விவரங்கள் தெரியாமல் பொய்யாக எதிர் வழக்குரை தாக்கல் செய்து வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மையில் மேற்படி சொத்தில் இருந்திருந்தால் வாதியின் அனுபவம் குறித்து தெரிந்திருக்கும் என்றால் நான் வெளியூரில் வேலை செய்து வந்தேன். என் தகப்பனார் பெயர் பழனிச்சாமி கவுண்டர். என் தகப்பனாருக்கு புல எண்.955/4 காலையில் மட்டும் சொத்து இருந்தது என்றால் சரிதான்.

4. நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.2 ஆவணமானது, தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்டது என்றும், அதற்கான விண்ணப்பத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெற்ற கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் குடியிருக்கும் வீட்டை 2020 ல் கட்டினேன். எனக்கு பாத்தியப்பட்ட பட்டா எண்.886 ல் என்ன அளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 290 ச.மீ ஆகும். மேற்படி சொத்தின் சதுரடி எவ்வளவு என்றால் கணக்கு பார்த்து தான் சொல்ல முடியும்.

5. நான் 5 வருடங்களுக்கு முன்பாக வீடு கட்டும்போது சர்வேயரை வைத்து சொத்தை அளந்தேனா என்றால் கிராம நிர்வாக அலுவலரை வைத்து அளந்து, வரைபடத்தில் உண்மை நகல் என குறிப்பிட்டு சான்று கொடுத்தார். அந்த சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் பிழைதிருத்தல் பத்திரத்தில் உள்ளது. என் வீட்டிற்கு கிழபுறமாக யார் உள்ளார் என்றால் புதிதாக ஒரு நபர் கிரயம் பெற்றுள்ளார். வா.சா.ஆ.1 கிரய பத்திரம், வாதிகள் கிரயம் பெற்ற விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பின்னிட்டு தான் தெரியும்.

6. நான் வடக்குதிசையில் கேட் அமைத்துள்ளேன். நான் என் மகனுக்காகவும் எனக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். என் மகன் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை குறித்து எனக்கு தெரியும். பி.சா.ஆ.7 உறுதிமொழி

பத்திரம், 12.08.2021 அன்று ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 23.02.2021 அன்று வழக்கறிஞர் மூலமாக வழக்கில் ஆஜரான பின்னிட்டு தான், பி.சா.ஆ.7 உறுதிமொழி பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான், அரசு கொடுத்த பட்டாவில் 4.2 மீ என்பதை குறிப்பிடவில்லை, அதனால் கிராம நிர்வாக அலுவலரிடம் சென்று அவருடைய ஆவணத்தை சரிபார்த்து மேற்படி வரைபடத்தில் கிராம நிர்வாக அலுவலர் 4.2 மீ என்பதை குறித்து உண்மை நகல் என்று சான்றளித்தால், அதன் அடிப்படையில் பிழை திருத்தல் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது.

7. பட்டாப்படி நான் கட்டியுள்ள வீட்டின் நான்கு எல்லைகளின் அளவு என்ன என்றால் தென்புறம் கிழமேல் - 15.8 மீ, கிழபுறம் தென்வடல் - 20.2 மீ, மேற்கு தென்வடல் - 21.6 மீ, வடபுறம் கிழமேல் - 14.4 மீ, இதன் மத்தியில் 290 ச.மீ ஆகும். மேற்படி அளவுகள் குறித்து பி.சா.ஆ.1 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது புல எண்.955 க்கான வரைபடத்தில் உள்ளது. புல எண்.955 க்கான வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் பிழைதிருத்தல் பத்திரம் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ளது. மேற்படி சொத்தில் கிழமேல் தென்புறமும், கிழபுறம் தென்வடலாக 2 அடி இடம் விட்டு வீடு கட்டியுள்ளேன். மேற்கு புறமும், வடக்குபுறமும் எல்லையில் வீடு கட்டப்பட்டுள்ளது.

8. அவ்வாறு எல்லையில் வைத்து வீடு கட்டியுள்ள நிலையில் அடுத்தவர் இடத்திற்கு சென்று தான் சுவற்றை பூச வேண்டும் என்றால் அது தவறு. இருபுறமும் பொதுப்பாதை உள்ளது. நான் தாக்கல்செய்துள்ள எதிர்வழக்குரையில், பிசா.ஆ.7 ஆவணம் எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்பது குறித்து விளக்கம் இல்லை என்றால் உள்ளது. நான் சொல்வது பொய் என்றும், அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.7 உறுதிமொழி ஆவணத்தில் மாற்றம் செய்ய வேண்டுமென்றால் பி.சா.ஆ.3 பாகதாரரான என்னுடைய தங்கையிடம் கையொப்பம் பெற்று தான் மாற்றம் செய்ய வேண்டும் என்றால் வழக்கறிஞர் மற்றும் சார் பதிவாளர் அலுவலகத்தில் விளக்கம் கேட்கப்பட்டது அதில் அவர்கள் உறுதிமொழி பத்திரம் மூலமாக செய்யலாம் என சொன்னார்கள். அதன் அடிப்படையில்மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டது.

9. நான், பி.சா.ஆ.3 ஆவணத்தில் திருத்தம் செய்ய வேண்டி என் தங்கைக்கு எழுத்துமூலமாக அறிவிப்பு அனுப்பினேனா என்றால் பஞ்சாயத்தார் மூலமாக பேசினோம். என் தங்கையின் மகனுக்கு திருமணம் இருப்பதால் வர முடியாது என சொன்னார். என் தங்கை இல்லாமல் ஏற்படுத்தி கொண்ட பி.சா.ஆ.7 உறுதி மொழி ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதியின் இடத்தை ஆக்கிரமிக்க வேண்டி நான் தவறான ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் சொத்தை அளந்தபோது, பி.சா.ஆ.7 உறுதிமொழி ஆவணத்தின் அடிப்படையில் சொத்தை அளக்க வேண்டி அறிவிப்பு ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை, வாய்மொழியாக நானும், என் வழக்கறிஞரும் புலவரைபடத்தின் படி சொன்னோம்.

10. மாதிரி வரைபடத்தில், உள்ளவாறு தான் என்னுடைய சொத்தும், வாதிகளின் 1, 2 அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் எனது வீட்டிற்கு பின்புறமாக 2 மீ அகலம் X 28 மீ நீளத்தில் பாதை உள்ளது. 2 மீ அகலம் X 28 மீ நீளத்தில் பாதை உள்ளதாக பி.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தில் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. புல எண்.956 க்கான புல வரைபடத்தில் பாதை உள்ளது. என்னுடைய சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வாதி தான் புகார் கொடுத்தார். நீதிமன்றத்தில் சிவில் வழக்கு நிலுவையில் இருந்ததால் காவல் துறையினர் தலையிட முடியாது என அனுப்பி விட்டனர்.

11. 1 லிங்க்ஸ் என்பது 0.67 அடி ஆகும். வாதியின் வீடு பழனிக்கவுண்டர் வீட்டிற்கு வடக்கு உள்ளது என்றால் தவறு. கிழக்கே பழனிச்சாமி வீடு உள்ளது என்றால் தெரியாது. என்னுடைய சொத்தை அளந்தபோது கிராம நிர்வாக அலுவலர் உடன் இருந்தார் என்றால் ஆமாம்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur